பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 02 வியாழக்கிழமை 16.06.2022 கதிர் 223

## இது ரகசியம் அல்ல!

பஸில் ராஜபக்ஷவின் இடத்திற்கு கோடீஸ்வர வர்த்தகர் தம்மிக பெரேரா எம்.பியாக நியமிக்கப்பட்டாலும், அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் போடப் பலர் தயாராகி வருகின்றனர் என இப்பத்தியில் முன்னரே குறிப்பிட்டிருந் ☞2

# அரசியல் சூதாட்டத்தால் ஆபத்தில் '21' திருத்தம்!



## சஜித் சுட்டிக்காட்டு

ஜனாதிபதிக்கு இருக்கும் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமலாக்கி அந்த அதிகாரங்களை நாடாளுமன்றத்துக்குப் பாரப்படுத்தும் வகையிலான 21ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரும் வகையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. தற்போது ஆடப்படுகின்ற அரசியல் சூதாட்டத்தின் காரணமாகவே 21ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு ஆபத்து நிகழ்ந்திருக்கின்றது.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். ☞2

## மொட்டுக் கட்சி பிரமுகர்களுக்கு பிணை அனுமதி

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த மற்றும் மொரட்டுவை நகர சபை மேயர் சமன்லால் பெர்ணான்டோ ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு கோட்டை நீதுவான் நீதிமன்றத்தில் அவர்களுக்கு எதிரான வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட போது இருவரும் தலா 10 மில்லியன் ரூபா பெறுமதிக்கு இருவரின் சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த மாதம் 9 ஆம் திகதி அலரி மாளிகை மற்றும் காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில்

## மறுசீரமைப்புக்கான தேசிய இயக்கத்தின் ஒன்றுகூடல்!



மறுசீரமைப்புக்கான தேசிய இயக்கத்தின் பிரதிநிதிகள் குழு நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கூடியது. ☞2

## வகுப்பு மீது மரம் வீழ்ந்தது பத்து மாணவர்கள் காயம்!

வெலிமட இந்துவில் சம்பவம்



வெலிமட இந்துக் கல்லூரிக்குப் பக்கத்து காணியில் இருந்த மிகப்பழமையான தென்னை மரம் ☞2

## நீரில் மூழ்கி 2 பேர் சாவு



நேற்று முன்தினம் மாலை இரு வெவ்வேறு சம்பவங்களில் நீரில் மூழ்கி இருவர் உயிரிழந்துள்ளனர். ☞04

## உணவுப் பொருள் பதுக்கலை தடுக்க சட்டம் என்கிறார் ரணில்



அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் சில்லறை வியாபாரிகள் எதிர்காலத்தில் ☞04

## 12 கோடி டொலர்களை அமெ. வழங்குகின்றது!



இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்காகவும் ஆதரவாகவும் அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் ☞04

## சட்டவிரோதமாக வெளியேற முயன்ற 64 பேர் திருமலைக் கடலில் கைது!



திருகோணமலை கடற்பரப்பில் இருந்து சட்டவிரோதமாக வெளிநாட்டிற்கு செல்ல முயற்சித்த 64 பேர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர் எனக் கடற்படை பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வா தெரிவித்தார். ☞04

## அண்மைய வன்முறைகளுக்கும்

# பொறுப்புக்கூறலை நிலை நாட்டுங்கள்!

## இணை அனுசரணை நாடுகள் ஜெனிவா அமர்வில் தெரிவிப்பு

ஜெனிவா, ஜூன் 16

இலங்கையில் அமைதியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் அதைத் தொடர்ந்து இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து ஜெனிவாவில் இலங்கை தொடர்பான தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கிய பிரித்தானியா தலைமையிலான நாடுகள் கரிசனை வெளியிட்டுள்ளன. இந்த வன்முறைகளிற்கு காரணமானவர்கள் பொறுப்புக்கூறச் செய்யப்பட வேண்டும் என்றும் அவை வலியுறுத்தியுள்ளன. (விரிவான செய்தி 10ஆம் பக்கத்தில்...)

## இளம் மனைவியின் கழுத்தை நெரித்துக் கொன்ற கணவன்

கொக்கட்டிச்சோலை பொலிஸில் சரண்

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் தனது 20 வயதுடைய மனைவியின் கழுத்தை நெரித்து கொலை செய்துவிட்டு பொலிஸ் நிலையத்தில் கணவன் சரணடைந்துள்ள சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக கொக்கட்டிச்சோலைப் பொலிஸார் தெரிவித்தனர். ☞2

## சண்டிலிப்பாயில் 30 பவுண் திருட்டு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் வடக்கு அம்மன் கோவிலடி பகுதியில் உள்ள ஒரு வீட்டில் நேற்று இரவு 7 மணியளவில் 30 பவுண் நகை களவாடப்பட்டுள்ளது. ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேன். மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் தம்மிக பெரேராவின் நியமனத்தைச் சட்ட சவாலுக்கு உட்படுத்தி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்திருக்கின்றது. தம்மிக பெரேராவின் பெயர் எம்.பியாக வர்த்தமானியில் வெளிவந்து விட்டது. எனினும் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றம் கூடும் போது தான் அவர் எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்து கொள்ள முடியும். ஆனால் அதற்கு இடையில் அவருக்கு நந்தியாகக் குறுக்கே வந்திருக்கின்றது இந்த வழக்கு.

இன்று, நாளை அல்லது திங்கட் கிழமை ஆகிய மூன்று நாள்களில் ஏதேனும் ஒன்றில் இந்த வழக்கை பரிசீலனைக்கு எடுக்குமாறு மனுதாரர் தரப்பு உயர்நீதிமன்றத்தில் விண்ணப்பித்துள்ளது.

அப்படி மனு பரிசீலனைக்கு எடுக்கப்படுகையில் அதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகி வாதாட இருக்கின்றார்.

பொதுத் தேர்தல் சமயத்தில் ஏதேனும் மாவட்டத்தின் வேட்பாளராகப் போட்டியிட்டவர் அல்லர் தம்மிக்க பெரேரா. அவரது பெயர் தேசியப் பட்டியலுக்கான வேட்பு மனுக்களில் கூட இருக்கவில்லை. அத்தகைய ஒருவர் தேசியப்பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட முடியாது என்பது மனுதாரர்களின் பிரதான வாதம். இந்த வாதத்தின் அடிப்படையில் எதிர் மனுதாரரான தம்மிக பெரேரா எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்வதற்கு எதிராக இடைக் காலத் தடை உத்தரவு விதிக்கப்பட வேண்டும் என மனுதாரர்கள் தமது மனுவில் கோரி இருக்கின்றனர். அத்துடன் அது மனு மீதான ஆரம்பப் பரிசீலனையின் போது முக்கிய விடயமாக சட்டத்தரணி சுமந்திரனால் முன்வைக்கப்படும் எனத் தெரிகிறது.

இந்த மனுவை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொள்வதுடன் தம்மிக பெரேரா நாடாளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்வதற்கு எதிராகவும் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பிக்க இடமுண்டு. அப்படிப் பிறப்பித்தால், மனுவின் மீதான விசாரணை முடிவடைந்து, இறுதித் தீர்ப்பு வரும்வரை கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டவில்லை என்ற ஆதங்கத்துடன் எம்.பி. பதவியை ஏற்பதற்கு தம்மிக பெரேரா காத்திருக்க வேண்டி நேர்ந்து விடும். அத்தகைய சூழலில் அவரின் அமைச்சர் பதவிக் கனவும் கூடத் தாமதமாகிப் போய் விடும் அல்லது கானல் நீராகிவிடும்.

★ ★ ★

நாடாளுமன்றத் தேர்தல்கள், மாகாண சபைத் தேர்தல்கள், உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் போன்றவற்றின் தேர்தல் முறைமைகள், பிரதிநிதித்துவ முறைமைகள் குறித்து ஆராய்ந்து பரிந்துரை செய்வதற்காக அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் அரசு நியமித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு, அரசைப் பொறுத்தவரை 'பிள்ளையார் பிடிக்க போய் குரங்கான கதை' யாகியிருக்கின்றது.

வழக்கமாக இத்தகைய நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்களில் எட்டு இடங்கள் அரசு தரப்புக்கு கொடுத்தால் ஏழு இடங்கள் எதிரணி தரப்புக்கு கொடுக்கப்படுவது வழமை. ஆனால் இந்தத் தெரிவுக்குழுவைப் பொறுத்தவரை ஆளும் தரப்பு 9 இடங்களை எடுத்துக்கொண்டு எதிர்த் தரப்பு ஆறு இடங்களையே வழங்கியிருந்தது. 9 க்கு 6 என்ற பெரும்பான்மையின் அடிப்படையில் ஆளும் தரப்பின் நிலைப்பாடே பெரும்பாலும் தெரிவுக்குழுவின் இறுதிப் பரிந்துரையாக வரும் என்று அரசுத் தரப்பு நம்பி இருந்திருக்கும். ஆனால் நிலைமை தலைகீழாகி விட்டது.

இந்தத் தெரிவுக்குழுவுக்கு சிறிய முஸ்லிம் கட்சியின் பிரதிநிதி என்ற அடிப்படையில் ரவூப் ஹக்கீம் சேர்த்துக் கொள்ளப்பட 9க்கு 6 என்ற நிலைமை 9க்கு 7 என்றாகியிருந்தது.

இது மக்களின் பிரதிநிதித்துவம் பற்றிய சீரியஸான விடயம் என்பதினால் அரசு தரப்பில் இருக்கின்ற சிறிய கட்சிகளின் பிரதிநிதிகளும், சிறுபான்மையினரின் கட்சிகளின் பிரதிநிதிகளும் தத்தமது கட்சிகளின் நலன்கருதி எதிரணியோடு ஒருநிலைப்பாடு எடுத்துக் கொண்டனர்.

இந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் காலம் நேற்றுடன் முடிவடையும் எனத் தெரிவிக்கப்பட்டது. நேற்றைய கடைசி கூட்டத்தில் இறுதிப் பரிந்துரை முடிவு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் நேற்றைய கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பங்கு பற்றவில்லை. அவர் யாழ்ப்பாணத்தில் இருந்தார்.

எனினும் இந்தப் பிரதிநிதித்துவ தெரிவு தொடர்பில் சிறுபான்மை இனத்தவர்கள் மற்றும் சிறிய கட்சிகள் ஒருநிலைப்பாட்டை எடுத்தபோது அந்த பக்கத்துக்கு, இது வரை காலமும் ஆளும் தரப்பிலிருந்த டக்ளஸ் தேவானந்தா, ஜீவன் தொண்டமான், விமல் வீரவன்ஸ போன்றவர்கள் அணி சேர்ந்து விட்டனர். அதனால் ஆளும் தரப்பில் ஆறு பேரும் எதிர் அணி தரப்பில் பத்துப் பேருமாக நிலைமை தலைகீழாகி விட்டது. ஆளும் தரப்பின் ஆறு பேரில் ஒருவரான பஸில் ராஜபக்ஷ எம்.பி. பதவியைத் துறந்து விட்டமையால், இந்தத் தெரிவுக் குழுவில் ஆளும் தரப்பின் நிலைமை 5 ஆகக் குறைந்து விட்டது.

இந்தச் சூழ்நிலையில் நாடாளுமன்றத்துக்கான தெரிவு முறைமையை இப்போதைய பிரதிநிதித்துவ அடிப்படையில் இருந்து மாற்றவே கூடாது என்ற நிலைப்பாட்டை எதிரணி எடுத்தது. தெரிவுக்குழுவில் பெரும்பான்மையினர் அந்தப்பக்கத்துக்குச் சார்பாக இருந்தமையால் தாம் எதிர்பார்த்து வந்த பரிந்துரையை இறுதி செய்யமுடியாத நிலையில் தெரிவுக் குழுவின் தலைவர் தினேஷ் குணவர்தன கூட்டத்தை இடைநடுவில் முடித்துக் கொண்டு புறப்பட்டார்.

இத்தெரிவுக் குழுவில் எதிரணியுடன் ஒன்று சேர்ந்து இருக்கும் 9 உறுப்பினர்களும் குழுவின் பெரும்பான்மையினரின் நிலைப்பாட்டை – தங்களின் முடிவை – அறிக்கையாக தினேஷ் குணவர் தனவிடமும் நாடாளுமன்றத்திடமும் சமர்ப்பிக்க இருக்கின்றனர்.

தம்முடைய இறுதிப் பரிந்துரைக்கு தெரிவுக்குழுவில் பெரும்பான்மையினரின் ஆதரவு பெறாத நிலையில் அதை என்ன செய்வது என்பதை தினேஷ் குணவர்த்தனதான் இனிமேல் முடிவு செய்ய வேண்டியிருக்கும்.

பாவம் தினேஷ். அவர் எதிர்பார்த்த முயற்சியை அவரது அரசு தரப்பில் இருந்த எம்.பிக்கள் 'ஸேம் சைட் கோல்' அடித்துக் குழப்பி விட்டார்கள்.

– மின்னல் –

## அரசியல் சூதாட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மறுசீரமைப்புக்கான தேசிய இயக்கத்தின் பிரதிநிதிகள் குழுவினருடன் எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கூறுகையில்,

நீதி அமைச்சரின் 21ஆவது திருத்தம், அரசின் 21 ஆவது திருத்தம், எதிர்க்கட்சியின் 21 ஆவது திருத்தம் என எதுவும் இல்லை. ரஞ்சித் மத்தும பண்டாரவால் தனிநபர் பிரேரணையாகக் கொண்டு வரப்பட்ட 21 ஆவது திருத்தம் மாத்திரமே தற்போதுள்ள ஒரே ஒரு திருத்தமாகும்.

உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் இன்னும் சில தினங்களில் வெளியிடப்படவுள்ளது. நாடாளுமன்றத்தின் மூன்றாவது வாரத்தில் அது குறித்து விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படலாம்.

எவ்வாறாயினும், இந்நாடு சீர்திருத்தங்களைவிட அரசியல் விளையாட்டுக்களில் மூழ்கியிருப்பதால் இது பற்றி விவாதிக்கப்படாத இரண்டாம் பட்ச கவனிப்பே இருக்கின்றது.

தற்போதைய அரசியல் நெருக்கடிக்கான தீர்வு மக்களின் புதிய ஆணையிலேயே தங்கியுள்ளது.

இந்த நெருக்கடிக்கு சில மாதங்களில் தீர்வு கிடைக்கும் எனச் சில வீரர்கள் பெருமை பேசினாலும்கூட, உண்மையான நிலைப்பாடு அவ்வாறு இல்லை.

புதிய சீர்திருத்தச் செயற்பாடுகளுக்கு சகல தரப்புகளினதும் யோசனைகள் இன்றியமையாதது – என்றார்.

## இளம் மனைவியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மகிழடித்தீவு காளிகோவில் வீதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தயாரான 20 வயதுடைய சிவலிங்கம் கஜேந்தினி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள மகழடித்தீவு காளிகோவில் வீதியில் வசித்த இந்த இளம் தம்பதியிடையே சந்தேகத்தினால் சண்டை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று இன்று அதிகாலை 4 மணிக்கு கணவன் தனது மனைவியின கழுத்தை நெரித்துக் கொலை செய்துவிட்டு தனது இரண்டரை வயதுக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு தனது சகோதரியின் வீட்டிற்கு கொண்டு சென்று ஒப்படைத்துவிட்டு, பொலிஸ் நிலையத்தில் பிற்பகல் 12 மணியளவில் சரணடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர் 30 வயதுடையவர் எனவும், அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு ஒப்படைப்பதற்கு நீதிமன்ற அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## மறுசீரமைப்புக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தற்போதைய நெருக்கடியிலிருந்து மீளுவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய சாத்தியமான நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ள முடியுமானநிலைப்பாடுகள் குறித்து நீண்ட கலந்துரையாடல் இடம் பெற்றது.

குறிப்பாக அரசமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

மிகவும் ஆக்கபூர்வமான வேலைத் திட்டத்தின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான தமது அர்ப்பணிப்பை அனைத்துத் தரப்பினரும் இதன்போது வலியுறுத்தினர்.

## சண்டிலிப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சண்டிலிப்பாயில் வசிக்கும் அரச உத்தியோகத்தர் குடும்பம் ஒன்று பணி முடிந்து வீடு திரும்பி வெளியில் சென்று இரவு 7 மணியளவில் வீடு திரும்பியபோது வீடு உடைக்கப்பட்டு நகை களவாடப்பட்டிருந்துள்ளது.

இக் களவு தொடர்பில் மானிப்பாய்ப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## வகுப்பு மீது மரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்று முறிந்து, பாடசாலை வகுப்பறையின் மீது விழுந்ததில் தரம் 6 இல் கல்வி கற்கும் பத்து மாணவர்கள் காயமடைந்தனர்.

அவர்கள் வெலிமட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் வெலிமட பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இலங்கையின் மறுமலர்ச்சிக்கு உதவுவோம்

இதோ அனைத்து உள்ளூர் தயாரிப்பாளர்களுக்கும் ஒரு சிறந்த வாய்ப்பு!!!

சீரழிந்து வரும் பொருளாதாரத்தை மீட்டெடுக்க, நீங்களும் உங்கள் உள்ளூர் உற்பத்திகள் மற்றும் சேவைகளை, இலங்கையின் பாரிய நேரடி விற்பனை தளத்தை கொண்ட குளோபல் லைஃப்ஸ்டைல் லங்கா தனியார் நிறுவனத்தின் ஊடாக சந்தைப்படுத்த முடியும்.

அலுவலக நேரத்தில் +94 76 677 9195 என்ற தொலை பேசி இயக்கத்தின் ஊடாக எங்கள் தயாரிப்பு நிர்வாகியை அழைக்கவும்

Global Lifestyle Lanka




POST YOUR AD
yarlads.com
உங்கள் விளம்பரங்களை இலவசமாகப் பதிவிட


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேர்தல்களே தீர்வு

**நாட்டின் தற்போதைய நெருக்கடிகள், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின் ஆட்சி மாற்றம் ஒன்று அவசியம் என்று மூத்த அரசியல் தலைவரான இரா.சம்பந்தன் கூறுகின்றார்.**

**அதுவே மக்களின் வேண்டுகோள், எதிர்பார்ப்பு என்றும் அவர் விளக்குகின்றார்.**

**இந்த அரசு மக்களின் நம்பிக்கையை முழுமையாக இழந்து விட்டது. தற்போதைய அரசால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது என்பது தெளிவாகி விட்டது. ஆகையால் ஆட்சி மாற்றம் அவசியம் என்கின்றார் கூட்டமைப்புத் தலைவர்.**

**சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் உதவிகள், சர்வதேச நாடுகளின் வலிமையான பங்களிப்பு போன்றவை இல்லாமல் இலங்கை கடைத்தேற முடியாது என்பது தெளிவு. அத்தகைய உதவிகள், ஆதரவுகள் கிட்டுவதற்கும் நம்பகத்தன்மையான – மக்கள் ஆதரவு பெற்ற – அரசாட்சி இருப்பது முக்கியம். அந்த நம்பகத்தன்மையை இழந்து விட்ட தற்போதைய ஆட்சிப் பீடத்தினால் சர்வதேச ஆதரவையும் உதவிகளையும் திரட்டுவது கூட சாத்தியமற்றது தான்.**

**சரி. அப்படியானால் ஆட்சி மாற்றம் அவசியம்தான். ஆட்சி மாற்றம் என்றால் எது? அந்த மாற்றம் எவ்வாறு ஏற்பட முடியும்? – என்ற கேள்விகள் எழுகின்றன.**

**2019 நவம்பர் முதல் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் இருக்கின்றார். முதலில் அவரது தலைமையின் கீழ் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நல்லாட்சி அரசு அதிகாரத்தில் இருந்தது. அந்த அரசு கலைக்கப்பட்ட பின்னர், பொதுத் தேர்தலை அடுத்து மஹிந்த ராஜபக்ஷ பிரதமரானார். அவரின் கீழ் முற்றிலும் மாறுபட்ட இரண்டு அமைச்சரவைகள் அடுத்தடுத்துப் பதவியில் இருந்தன. இப்போது பிரதமர் பதவியிலிருந்து மஹிந்தர் இறங்க ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் பிறிதொரு அரசு வந்து விட்டது.**

**ஆக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் நிதி மந்திரிகள், மத்திய வங்கி ஆளுநர்கள், திறைசேரி செயலாளர்கள் எனப் பலர் மாறியமை போல இப்போது அரசுகளும் மாறி நான்காவது அரசும் வந்த விட்டது.**

**இப்படியான அரசு மாற்றங்கள், இந்தப் பிரச்சினையை எதிர்கொண்டு மீளப் போதுமானவையா என்பதுதான் கேள்வி.**

**அரசு மாற்றம் என்பது – இப்போது இந்த நெருக்கடிச் சூழலில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்குத் தேவைப்படும் அரசு மாற்றம் என்பது – வெறுமனே ஆள்கள் –பிரமுகர்கள் – மாற்றம் மட்டுமல்ல. மஹிந்தர் போய் ரணில் வந்தார் என்பது போன்ற மாற்றமல்ல.**

**அரசியல் கட்டமைப்பு ரீதியான முழு மாற்றமே இன்று தேவைப்படுகின்றது.**

**ஜனாதிபதியிலிருந்து அரசாங்கம் வரை முழுக் கட்டமைப்பு ரீதியான மாற்றமே அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படுகின்றது.**

**சம்பந்தன் சுட்டிக் காட்டுகின்றமை போல அரசின் மீதும், ஜனாதிபதியின் மீதும் மக்கள் நம்பிக்கையை முழுமையாக இழந்து விட்டார்கள்.**

**இந்த இரண்டு அலகுகளையுமே மாற்ற வேண்டுமானால் அதற்கு வழி புதிய தேர்தல்கள்தான். மக்களின் விருப்பை – எதிர்பார்ப்பை –இறைமையை –வெளிப்படுத்தும் வாய்ப்பைத் தேர்தலே தரும் என்பதால் அதற்கான தேர்தல்களை – ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலை – விரைந்து நடத்துவதுதான் பொருத்தமான மார்க்கமாக இருக்கும்.**

# ஜனாதிபதி உடனடியாக பதவி விலகவேண்டும்!

## சிவில் சமூக அமைப்பு வேண்டுகோள்

மருத்துவர்கள் சட்டத்தரணிகளை உள்ளடக்கிய 'டிறைக்சன் சிறிலங்கா' என்ற சிவில் சமூக அமைப்பு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவேண்டும் என மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கும் தானும் காரணம் என்பதை பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ள ஜனாதிபதி தான் பதவி விலகவேண்டும் என விடுக்கப்படும் வேண்டுகோள்களை அலட்சியப்படுத்த முடியாது என மருத்துவர்கள் சட்டத்தரணிகளை உள்ளடக்கிய சிவில் சமூக அமைப்பு தெரிவித்துள்ளது.

நாட்டின் அரசியல் பொருளாதார சமூக நெருக்கடிக்கு தீர்வைக் காணும் விடயத்தில் இன்றுவரை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை,நாளாந்தம் நிலைமை மோசமடைவது தேசத்தினதும் மக்களினதும் உயிர் வாழ்தலுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

தற்போது பின்பற்றப்படும் அரைகுறை - அல்லது இடைக்கால நடவடிக்கைகள் எரியும் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணப் போவதில்லை எனக் கருதுவதாகத் தொழில் சார்துறையினரை கொண்ட அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியும் அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இந்த விவகாரத்தைக் கையாளும் விதத்தை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கின்றோம். அரசியல் பண மற்றும் தனிப்பட்ட ஆதாயங்களை அடைவதற்கு முயற்சி செய்யும் அனைத்து கட்சிகளும் மக்களின் அபிலாஷைகளை விருப்பங்களை மறந்துவிட்டன போலத் தோன்றுகின்றது எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

பொதுமக்களின் வேண்டுகோளை ஏற்று ஜனாதிபதி உடனடியாகப் பதவி விலகவேண்டும்,இதுவே பொதுமக்களின் முதன்மையான வேண்டுகோள். இந்த நெருக்கடி ஏற்படுவதற்கு தானும் காரணம் என்பதை ஜனாதிபதி வெளிப்படையாக ஏற்றுக்கொண்டுள்ளமையால் அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் என அந்த அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

# இலங்கையில் பெருமளவிலான மக்கள் நாளாந்த உணவை குறைத்துள்ளனர்

## உலக உணவுத் திட்டம் அறிவிப்பு

இலங்கையில் பெருமளவு மக்கள் தங்கள் நாளாந்த உணவை குறைத்துக்கொண்டுள்ளமை ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது என உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட மக்களில் 66 வீதமானவர்கள் தங்கள் நாளாந்த உணவை குறைத்துக்கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது என உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் மாதத்தில் உலக உணவுத் திட்டம் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து உணவு பாதுகாப்பு மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளது.

17 மாவட்டங்களில் மிகவும் வறிய நிலையில் உள்ள வீடுகளை ஆய்விற்கு உட்படுத்தியவேளை 86 வீதமானவர்கள் மலிவான சத்துக்குறைந்த உணவுகளைக்கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளமை தெரியவந்துள்ளதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் 83 வீதமானவர்கள் உணவின் அளவைக் குறைக்க ஆரம்பித்துள்ளனர். 66 வீதமானவர்கள் நாளாந்தம் உண்ணும் உணவின் எண்ணிக்கையைக் குறைக்க ஆரம்பித்துள்ளனர் எனவும் உலக உணவுத் திட்டம் தனது ஆய்வு தொடர்பில் தெரிவித்துள்ளது.

இலங்கையில் 57 லட்சம் மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்றன. 49 லட்சம் மக்கள் உணவுப்பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர், ஜீன் முதல் செப்டெவரி வரையிலான காலப்பகுதியில் மனிதாபிமான மற்றும் முன்னுரிமை திட்டம் 17 லட்சம் மக்களை இலக்குவைத்துள்ளது எனவும் ஐ.நா. அமைப்பு தெரிவித்துள்ளது.

### 12 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சபை இலங்கைக்கு புதிதாக 12 கோடி டொலர்களை(சுமார் 4 ஆயிரத்து 400 கோடி ரூபாவை) வழங்குவதற்கு அனுமதிவழங்கியுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இதனை நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இலங்கை பொருளாதாரம் வளர்ச்சியடைவதற்காகவும் மக்களிற்கு ஆதரவாகவும் கடந்த 70 வருடங்களாக அமெரிக்கா வெளிநாட்டு உதவி கடன்கள் மற்றும் வர்த்தக வாய்ப்புகளை வழங்கியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இன்றைய அறிவிப்பு தனியார் துறையினருக்கு சிறந்த செய்தி என மேலும் தெரிவித்துள்ள அவர் டிஎவ்சியின் 12 கோடி அமெரிக்க டொலர் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களை சென்றடையும் என குறிப்பிட்டுள்ளார்.

### உணவுப் பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உணவுப் பொருள்களைப் பதுக்கி வைப்பதைத் தடுக்கும் வகையில் புதிய சட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்தும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

அரிசி ஆலை உரிமையாளர்கள் கோரிய கடன்கள் தொடர்பில் பிரதமர் நேற்று வர்த்தக வங்கிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

வங்கிகள் கோரிய கடன்களை போதிய அளவில் வழங்காத நிலையில், அரிசி கையிருப்பு பதுக்கி வைக்கப்படுவதாக வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ பிரதமரிடம் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் நிதிக் கொள்கைகளுக்கு இணங்க இலங்கை வங்கி கடன்களை வழங்குவதை உறுதிசெய்து, வங்கிகளின் கடன் கொள்கைகளை கண்காணிக்குமாறு மத்திய வங்கி மற்றும் திறைசேரி அதிகாரிகளுக்கு பிரதமர் பணிப்புரை விடுத்தார்.

### சட்டவிரோதமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

50 ஆண்களும், 11 பெண்களும், 3 சிறார்களுமே இலங்கைக் கடற்படையினரால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 07 ஆட்கடத்தல்காரர்களும் அடங்குகின்றனர் எனக் கடற்படை தெரிவித்துள்ளது.

திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயணித்த படகொன்றும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

### நீரில் மூழ்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மஹியங்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகாவலி ஆற்றுப் பாலத்திற்கு அருகில் குடும்பத்துடன் நீராடச் சென்ற 16 வயது சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளான்.

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய ஹான் என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

பொலிஸாஎ, கடற்படையினர் மற்றும் பிரதேசவாசிகள் சிறுவனைத் தேடிவருகின்றனர்.

இதேவேளை, சியம்பலாண்டுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முத்துகண்டிய பிரதேசத்தில் உள்ள கால்வாயில் நீராடச் சென்ற இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் சியம்பலாண்டுவ பொத்துவில் வீதியைச் சேர்ந்த 22 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# பரஸ்பர இராணுவ வசதிகளுக்காக இந்தியாவும் வியட்நாமும் ஒப்பந்தம்

இந்தியாவும் வியட்நாமும் 2030 ஆம் ஆண்டிற்குள் தங்கள் இருதரப்பு பாதுகாப்பு உறவுகளின் 'நோக்கம் மற்றும் அளவை கணிசமாக மேம்படுத்தும் இலக்கில் ஒரு கூட்டு நோக்கு ஆவணத்தில் கையெழுத்திட்டன.

அதே நேரத்தில் தங்களின் இராணுவங்கள் ஒன்றின் தளத்தை மற்றொன்று பயன்படுத்தி தளவாடங்கள் மற்றும் பொருள்களைப் பழுது பார்த்து, மீள நிரப்பும் ஒரு பரஸ்பர ஆதரவு ஒப்பந்தத்தையும் இறுதி செய்தன.



இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆக்கிரமிப்பு மற்றும் விரிவாக்க நடத்தை குறித்து இரு நாடுகளும் எச்சரிக்கையாக இருக்கும் பின்னணியில், ஹனோயில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் அவரது வியட்நாம் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் பான் வான் ஜியாங் இடையே விரிவான மற்றும் பலனளிக்கும் பேச்சுகளின் பிரதிபலனாக இந்த உடன்பாடு எட்டப்பட்டது.



இந்தியா மற்றும் வியட்நாம் இடையே நெருக்கமான பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மைக்கு ஒரு முக்கிய காரணியாகும் என ராஜ்நாத் சிங் கூறினார்.

பரந்த அளவிலான விவாதங்கள் இருதரப்பு ஈடுபாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான பயனுள்ள மற்றும் நடைமுறை முன்முயற்சிகள் மீது கவனம் செலுத்த வாய்ப்பளித்தது. பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகளும் பேச்சுகளில் முக்கியத்துவம் பெற்றன'' - என்று அமைச்சர் மேலும் கூறினார்.

பரஸ்பர தளவாட ஆதரவு தொடர்பான இந்தியாவுடனான இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் வியட்நாம் எந்த நாட்டுடனும் கையெழுத்திட்ட முதல் பெரிய உடன்பாடாகும்.

ஆனால் இந்தியாவோ இத்தகைய பரஸ்பர தளவாட ஒப்பந்தத்தை அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், பிரான்ஸ், தென் கொரியா மற்றும் சிங்கப்பூர் போன்ற பல நாடுகளுடனும் கொண்டுள்ளது.

வியட்நாமுக்கு வழங்கப்படும் ஐம்பது கோடி டொலர் பாதுகாப்புக் கடன் வரிசையை முன்கூட்டியே இறுதி செய்து நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு இரு அமைச்சர்களும் ஒப்புக்கொண்டனர். இந்தியாவும் வியட்நாமும் அண்மைய காலங்களில் மிகவும் நம்பகமான உறவுகள் மற்றும் நலன்கள் மற்றும் பொதுவான கவலைகள் ஆகியவற்றைப் பரந்த ஒருங்கிணைப்புடன் தொடர்கின்றன, என்று பாதுகாப்பு அமைச்சக அதிகாரி கூறினார்.

**(மூலம்: டைம்ஸ் ஓவ் இன்டியா)**

# சீன விஜயத்தினால் சிக்கலில் சிக்கிய சீமாட்டி பச்சலெட்

## ஜெனிவா பதவியிலிருந்து ஒகஸ்டில் விலகல்

மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகர் மிச்செல் பச்சலெட் அம்மையார் தனது பதவிக்காலம் ஒகஸ்ட் இறுதியில் முடிவடையும் போது தாம் பதவி விலகுவார் என்று அறிவித்தார். ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் ஐம்பதாவது தொடருக்கான அமர்வை கடந்த திங்களன்று ஆரம்பித்து வைத்து வெளியிட்ட ஓர் அறிக்கையின் முடிவில் தனது இந்த முடிவை அவர் வெளிப்படுத்தினார். தாம் தலைமையேற்று நடத்தும் கடைசிக் கூட்டத் தொடர் இது என்றார் அவர்.

ஒரு மாதத்திற்குள் சீனாவிற்கு அவர் மேற்கொண்ட விஜயம் குறித்து மனித உரிமைக் குழுக்களிடமிருந்து கடுமையான விமர்சனங்கள் எழுந்த நிலையிலேயே இந்த அறிவிப்பை வெளியிட வேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



2018 இல் ஐக்கிய நாடுகள் சபையின் இந்தப் பணியை ஏற்றுக்கொண்ட சிலியின் முன்னாள் ஜனாதிபதியான திருமதி பச்சலெட் அம்மையார், தான் பதவி விலகுவதான் எந்த முன்னறிவிப்பையும் முன்பு கொடுக்கவில்லை.

சபையில்திங்களன்று உரையாற்றிய பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், சிலியில் உள்ள தனது குடும்பத்திற்குத் திரும்பத் தான் விரும்புகிறேன் எனவும், இரண்டாவது முறையாக இந்தப் பதவியை ஏற்கப்போவதில்லை எனவும், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸிடம் இரண்டு மாதங்களுக்கு முன்பே தமது முடிவைத் தாம் தெரிவித்தேன் எனவும் கூறினார்.




மே மாதம் அவர் சீனாவுக்குச் விஜயம்செய்தமை 17 ஆண்டுகளில் ஐ.நா. மனித உரிமைத் தலைவர் ஒருவர் அந்த நாட்டுக்குச் சென்றதாக அது அமைந்தது. அது தொடர்பில் உலகம் முழுவதும் சீற்றத்துடன் இருக்கும் உரிமைக் குழுக்களிடமிருந்து அவர் செமத்தியாகக்கண்டனங்களை வாங்கிக்கட்ட வேண்டியவராக இருந்தார்.



சின்ஜியாங்கில் முஸ்லிம்கள் பெருமளவில் சிறைவைக்கப்படுவது மற்றும் சீனாவில் செயற்பாட்டாளர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறை பற்றிய எந்தவொரு பொது அறிவித்தலையும் தவிர்த்ததன் மூலம் இந்த விஜயம் பெய்ஜிங்கிற்கு ஒரு பிரச்சார சதிக்கான வாய்ப்பை வழங்குவதாக அமைந்தது என விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

சின்ஜியாங்கில் நிகழ்த்தப்படும் அட்டூழியங்களின் தீவிரத்தன்மைக்கு வெகு தொலைவில் தள்ளி நின்றும் கூட பச்சலெட் அம்மையாரிடமிருந்து ஒரு சிறிய கண்டனம் கூட வரவில்லை என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இயக்குநர் கென்னத் ரோத், சபை அமர்வுக்கு முன்னதாக செய்தியாளர்களிடம் கூறினார்.

பின் அறை உரையாடலுக்காக அவர் (பச்சலெட் அம்மையார்) தனது மிக சக்தி வாய்ந்த ஆயுதத்தை விட்டுவிட்டார், அது அர்த்தமற்றதாகும்.

சின்ஜியாங்கில் உய்குர்கள் மற்றும் பிற முஸ்லிம்களை சீனா நடத்துவது குறித்தும், திபெத் மற்றும் ஹொங்கொங்கில் பெய்ஜிங்கின் கொள்கைகள் குறித்தும் தனது சீனப் பயணத்தின் போது (சம்பந்தப்பட்ட தரப்புகளிடம்) கவலை தெரிவித்தார் என மனித உரிமைகள் பேரவையில் திங்களன்று பச்சலெட் அம்மையார் கூறினார். சின்ஜியாங்கில் சீனாவின் நடவடிக்கைகள் குறித்து நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட (தமது) அறிக்கையை வெளியிடுவதில் தாம் உறுதியாக இருக்கிறேன் எனவும் அவர் கூறினார்.

கடந்த ஆண்டு முதல் வெளியீட்டிற்காக காத்திருக்கும் இந்த அறிக்கை இப்போது புதுப்பிக்கப்பட்டு வருகிறது என்று பச்சலெட் அம்மையார் சபையில் தெரிவித்தார். தாம் பதவி விலகும் முன் அதை வெளியிடுவேன் என்றும் அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

**(மூலம்:நியூயோர்க் ரைம்ஸ்)**

# சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை இந்த மாதத்துக்குள்பெற பிரதமர் முயற்சி

## வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு



இந்த மாதத்துக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ளவும் இலங்கையில் உணவு பாதுகாப்பு வேலைத்திட்டம் ஒன்றை உடனடியாக செயற்படுத்தவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார்.

அந்த வேலைத்திட்டம் வெற்றியடையும்வரை மக்கள் பொறுமையுடன் செயற்படவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலியல் அமைந்துள்ள கட்சி காரியாலயத்தில் 14 ஆம் திகதி இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாடு முகம்கொடுத்திருக்கும் பிரச்சினைகளில் இருந்து மீட்டெடுத்து மக்களுக்கு சிறந்ததொரு வாழ்கை முறையை ஏற்படுத்திக்கொடுப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார்.

அந்த வேலைத்திட்டத்தில் ஆரம்ப நடவடிக்கையாக இருப்பது எரிபொருள், எரிவாயு, மின்சாரம், மருந்து பொருள்கள் உட்பட அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்காக இடம்பெற்றுவரும் வரிசையை இல்லாமலாக்கி இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதாகும்.

மேலும் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்ட நாள் முதல் இன்றுவரை அதற்காக எடுத்த நடவடிக்கை காரணமாக படிப்படியாகப் பிரதான பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கப்பெற்று வருகின்றது என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியம் உட்பட உலகில் ஏனைய நிறுவனங்கள் மற்றும் நாடுகளுடன் மிகவும் நெருக்கான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு, நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளில் இருந்து மீட்பதற்கு தொடர்ந்து முயற்சித்து வருகிறார்.

நாங்கள் அனைவரும் எந்த வரப்பிரசாதங்களைம் பெற்றுக்கொள்ளாமல், வேலைத்திட்டங்களை வெற்றியடையச் செய்வதற்காக ஒத்துழைப்பை வழங்கி வருகின்றோம்.

அத்துடன் இந்த மாதம் இறுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர்கள் மட்டத்திலான இணக்கப்பாட்டுக்கு வரமுடியுமாகும் என பிரதமர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

அதன் பிரகாரம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ள முடியுமாகும். அதேபோன்று ஏற்பட் டிருக்கும் உணவுப் பற்றாக்குறை காரணமாக நாட்டுக்குள் உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். இதன் ஊடாக நாட்டுக்குள் ஏற்பட்டிருக்கும் உணவு பற்றாக்குறைக்குத் தீர்வை பெற்றுக் கொடுக்க முடியுமாகும்.

மேலும் இன்று அதிகமானவர்கள் அரசமைப்பு திருத்தம் தொடர்பில் கதைத்து வருகின்றனர். ஆனால் நாட்டில் தற்போது முக்கிய தேவையாக இருப்பது அரசமைப்பின் 21ஆம் திருத்தம் அல்ல. – என்றார்.



# அரியவகை ஆமை கிளிநொச்சியில் மீட்பு!

கிளிநொச்சியில் அரிய வகை நட்சத்திர ஆமை மீட்கப்பட்டு வன ஜீவராசிகள் திணைக்களத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, தர்மபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மயில் வாகனபுரம் பகுதியில் விவசாயி ஒருவர் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே குறித்த ஆமை அடையாளம் காணப்பட்டுள்ளது,

இந்த ஆமை இனமானது அருகிவரும் நட்சத்திர ஆமை வகையைச் சேர்ந்தது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

மேலும், இந்த ஆமை இனமானது இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் நாட்டிற்கு உரித்துடையவைகள் எனவும், கடத்தப்பட்டு விற்பனை செய்யப்படும் அரிய வகையான ஆமை இனம் எனவும் தெரியவருகின்றது.

உலகளவில் அதிகம் கடத்தப்படும் உயிரினங்களில் இந்த நட்சத்திர ஆமை ஒன்றாகும். ஒரு நட்சத்திர ஆமையின் விலை 500 டொலரிலிருந்து 2 ஆயிரம் டொலர் வரை சர்வதேச சந்தையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சமன்பிட்டி அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகப் பெருவிழா





சோழர் ஆட்சிக்கு உட்பட்டதும், பழம் பெரும் இராசதானிகளைக் கண்டதுமான பொலன்னறுவை சமன்பிட்டி அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக பெருவிழா திங்கட்கிழமை வெகு விமர்சையாக இடம்பெற்றது.

இலங்கையில் உள்ள பழம்பெரும் சக்தி ஆலயங்களில் ஒன்றாகவும், வடமத்திய மாகாணத்தில் உள்ள சகல இன மக்களினதும் வழிபாட்டுக்குரியதுமான சமன்பிட்டி – கறுப்பளை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் புனருத்தாருணம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இம்மாதம் 09ஆம் திகதி காலை விநாயகர் வழிபாட்டுடன் மஹா கும்பாபிஷேக நிகழ்வுகள் ஆரம்பமாகியிருந்தன.

அதனைத் தொடர்ந்து கடந்த 11ஆம் மற்றும் 12 ஆம் திகதிகளில் பெருமளவிலான பக்தர்களின் பிரசன்னத்துடன் எண்ணெய்க்காப்பு நிகழ்வு இடம்பெற்றதுடன் 6ஆம் நாளாகிய திங்கட்கிழமை விசேடயாக பூஜைகள், ஹோமங்கள், மாஹா பூர்ணாகுதி என்பன இடம்பெற்று ஸ்தூல லிங்க அபிஷேகம் மற்றும் மஹா கும்பாபிஷேக நிகழ்வுகள் மங்கள இசை முழங்க பக்தர்களின் அரோஹரா கோஷத்துடன் இடம்பெற்றன.

பெரிய போரதீவு ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலய பிரதமகுரு ஆச்சாரிய தீபம் வை.இ.எஸ்.காந்தன் குருக்கள் மற்றும் இலுப்படிசேனை முத்து மாரியம்மன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சி.கு.அருட்பிரகாசக் குருக்கள் ஆகியோரின் அருள் ஆசியுடன் மட்டக்களப்பு, கல்லடி உப்போடை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதம குரு தெய்வீக கிரியா ஜோதி சிவஸ்ரீ அருட்பிரகாச லிகித ராஜக் குருக்கள் தலைமையில் இந்தக் கும்பாபிஷேக நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன் யாழ்ப்பாணம் கொக்குவில் சாயி துர்க்கா ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சோ.கோகுலதாஸ சர்மா, களுவாஞ்சிச்குடி ஸ்ரீ சீதாராம் சனாதன் தர்மபீட ஸ்தாபகர் சிவஸ்ரீ ந.திலகேஷ்வரக் குருக்கள், கற்பிட்டி இந்து ஆலயங்களின் பிரதம குரு சிவஸ்ரீ வாமதேவ சிவாச்சாரியார், தம்பங்கடவை சித்திரவேலாயுத ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சுதன் சர்மா, ஏறாவூர் அன்னை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய பிரதம குரு வாமதேவன் குருக்கள், திருகோணமலை திருக்கடலூர் பத்திரகாளி அம்மன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீஊ கோபால சசிகர சர்மா, நுவரெலியா ஹென்போல்ட் சிவஸ்ரீ வாசுதேவ சர்மா, யாழ்ப்பாணம் சிவஸ்ரீ ஞானஅருண் பிரசாத், புஸ்சல்லாவ சிவஸ்ரீ சிவகுமாரக் குருக்கள், முனைத்தீவு சிவஸ்ரீ பி.கஜேந்திரக் குருக்கள், திருக்கேதீஸ்வரம் மாளிகைத் திடல் சிவஸ்ரீ க.கணிஷ்ரன் குருக்கள், புத்தளம் சித்திவிநாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ மோ.சவிதர குருக்கள், களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் ஆலய குரு சிவஸ்ரீ புண்ணிய கிருஷ்ணகுமார குருக்கள், திருக்கோயில் சிவஸ்ரீ ஜெயப் பிரசாந் சர்மா, சிவஸ்ரீ தற்புரு சிவாச்சாரியார் மற்றும் சிவஸ்ரீ கோபால கிரிதரக் குருக்கள் உள்ளிட்டவர்களுடன் இலங்கையில் பல பாகங்களில் இருந்தும் வருகை தந்த குருமார்கள் இந்தக் கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை சிறப்பம்சமாகும்.

மேலும் இந்த ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வுகள் எதிர்வரும் 24 ஆம் திகதி சங்காபிஷேகத்துடன் இனிதே நிறைவு பெறவுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 26 ஆம் திகதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் பூசகர்களான வைரன் செல்வம் மற்றும் பேரின்பம் ஜெயமோகன் ஆகியோரின் தலைமையில் திருச்சடங்கு ஆரம்பமாகவுள்ளதாகவும் ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# அரச ஊடக நிறுவன பதவிகளில் முஸ்லிம்கள் முற்றாக புறக்கணிப்பு!

## முஸ்லிம் அரசியல்வாதிகள் தட்டிக்கேட்க வேண்டும்

(நூருல் ஹுதா உமர்)

அரசாங்க ஊடக நிறுவனங்களுக்கு புதிய தலைவர்கள் மற்றும் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன மேற்படி நியமனங்களை ஒருசில தினங்களுக்கு முன்னர் வழங்கி வைத்தார். இந்த நியமனங்களில் முஸ்லிம் தரப்பு முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஊடகத்துறையிலும் கல்வித் துறையிலும் ஏனைய கலை, இலக்கியத் துறைகளிலும் எத்தனையோ தகுதியான சிரேஷ்டத்துவம் கொண்டவர்களும் கல்வியியலாளர்களும் முஸ்லிம் சமுகத்துக்குள் இருக்கத்தக்கதாக இந்தப் புறக்கணிப்பு இடம்பெற்றுள்ளமை திட்டமிட்ட சதியாகவே முஸ்லிம் சமுகத்தினரால் பார்க்கப்படுகின்றது என அல் – மீஸான் பௌண்டன் ஸ்ரீலங்கா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

கடந்த பல வருட காலமாக இலங்கை சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராக இருந்து வந்த புரவலர் ஹாசிம் ஒமரும் இந்த முறை எவ்வித பதவிகளிலும் நியமிக்கப்பட வில்லை. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைப் பொறுத்தவரை முஸ்லிம் சேவையில் அதான் ஒலி பரப்புக்கு பெருந்தொகை பணத்தை வழங்கி அனுசரணை வழங்கும் பிரபல ஆடை நிறுவனம் தனது வர்த்தக நாமத்தை பயன்படுத்துவதில்லை. ஆனால் சிங்கள சேவையில் பௌத்த மத நிகழ்ச்சிகளை அனுசரணை இன்றியே நடத்திச் செல்கின்றனர் என சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் பலரும் தமது ஆதங்கங்களை பொதுவெளியில் வெளிப்படையாகத் தெரிவித்து வருகின்றனர்.

அதேபோல் அரச ஊடக நிறுவனங்கள் அனைத்திலும் கடமையாற்றும் முஸ்லிம் ஊடகவியலாளர்களும், கட்டுப்பாட்டாளர்களும், அறிவிப்பாளர்களும் பெருந்தொகையான முஸ்லிம் அனுசரணையாளர்களை நெருங்கி நிகழ்ச்சிகளுக்கு அனுசரணை பெற்றுக் கொடுத்து வருகின்றனர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இன்று ஓரளவு நஷ்டமின்றி செயற்படுவதற்கு பிரதான காரணம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும் அனுசரணைகளே எனத் தகவல்கள் வெளிப்படுத்துகின்றன. ஆனால் இந்தத் தகவல் திட்டமிட்டு மூடிமறைக்கப்படுகின்றன எனும் குற்றச்சாட்டும் இருக்கிறது.

இந்த அரசாங்கத்தின் அமைச்சரவை அமைச்சராக இருக்கும் பிரபல தொழிலதிபரும் பொறியியலாருமான அல்ஹாபிழ் இஸட் ஹாபீஸ் நஸீர் அஹமட், அதுபோல் ஆளும்தரப்பு, எதிர்தரப்பு மற்றும் சுயாதீன தரப்பு முஸ்லிம் எம்.பிக்கள் இந்த விவகாரத்தில் உடன் தலையீடு செய்யவேண்டும்என்பதுடன்முஸ்லிம்சமூகத்துக்குரிய நியாயமான நியமனங்களைப் பெற்றுத்தர முயற்சிக்க வேண்டும். முஸ்லிம் சமூகத்துக்குரிய உரிமைகளுக்குள் இந்த நியமனங்களும் உள்ளடங்கும் என்பதை நீங்கள் அறியாதவர்களும் அல்லர். ஆகவே, இந்த விவகாரத்தில் உடனடியாக சகல முஸ்லிம் அரசியல்வாதிகளும் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## எரிபொருள்கள் வழங்கக்கோரி தெஹிவளையில் ஆர்ப்பாட்டம்

எரிபொருள் வழங்கக் கோரி, தெஹிவளையில் நேற்று (புதன்கிழமை) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பிரதான வீதியை மறித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதால், கொழும்பு – காலி வீதியில் இரு பக்கங்களிலும் கடுமையான வாகன நெரிசல்கள் ஏற்பட்டன.

பிரதான வீதியில் மட்டுமன்றி, குறுக்கு வீதிகளிலும் கடும் வாகன நெரிசல்கள் ஏற்பட்டன.

இதனால், காலைவேளையில் காரியாலயங்களுக்கு செல்ல வேண்டியவர்கள் மற்றும் அலுவலகங்களுக்குச் செல்லவேண்டியவர்கள் கடும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

தெஹிவளையில் மட்டுமன்றி, கொழும்பில் பல இடங்களிலும் ஆங்காங்கே எரிபொருள்களைக் கோரி, ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## நான் பொதுப்பாதுகாப்பு அமைச்சரானால் அரசிலுள்ளவர்களை சிறையில் அடைப்பேன்

### சரத் பொன்சேகா கோபாவேசம்



நாட்டின் நிலைமை தொடர்பாக பிரதமரிடம் எந்த திட்டமும் இல்லை என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நேற்று (புதன் கிழமை) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், அரசாங்கம் மக்களை நிரந்தரமாக ஏமாற்றி வருகிறதெனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இதன்போது, பிரதமரின் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியேற்று ஊழல்வாதிகளைத் தண்டிக்க விருப்பம் இல்லையா என கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர், நான் பொலிஸ் அமைச்சரானால் முதலில் இந்த அரசாங்கத்தில் உள்ள அனைவரையும் சிறையில் அடைக்க வேண்டும். அதுதான் பிரச்சினை.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்பாகவே நான் பிரதமராகப் பதவியேற்க வேண்டும் என்று கூறப்பட்டது. அப்போது எனக்கு எந்த நிபந்தனையும் இருக்கவில்லை.

செய்ய வேண்டிய திட்டம் பற்றிப் பேசினேன். அந்தத் திட்டத்துக்கு ஜனாதிபதி உடன்படவில்லை.

இதனையடுத்து, ரணிலுக்கு பதவி வழங்கப்பட்டது. எனினும் அவர் எதுவுமே செய்யாமல் இருக்கிறார். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மீதான எமது அக்கறையே பால் உற்பத்தியை இரட்டிப்பாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்!

### அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு



அமெரிக்க விவசாயத்திணைக்களத்தின் முன்னேற்றத்துக்கான உணவு முயற்சியில் பங்குபெறும் இலங்கை பால் பண்ணையாளர்களின் பால் உற்பத்தியை இரட்டிப்பாக்குவதை நோக்கமாகக்கொண்டு 2 கோடியே 70 லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருநாடுகளும் கைச்சாத்திட்டுள்ளன.

இந்தச் செயல்திட்டம் இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் கடந்த 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், இதனூடாகப் பால் உற்பத்தி சராசரியாக 68 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டதன் மூலம் சுமார் 25 ஆயிரம் பால் பண்ணையாளர்கள் பயனடைந்திருக்கின்றார்கள்.

அதுமாத்திரமன்றி இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் உணவுப்பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிசெய்யும்முயற்சிக்கானஅமெரிக்கஒத்துழைப்பின் ஓரங்கமான இந்தச்செயற்திட்டம்மூலம் சுமார் 80 ஆயிரம் இலங்கையர்கள் பயனடைவார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாகத் தாமதப்படுத்தப்பட்டுவந்த இந்த ஒப்பந்தம் கடந்த திங்கட்கிழமை அமெரிக்கத் தூதரகத்திற்கும் இலங்கை விவசாயத்திணைக்களத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த 2 கோடியே 70 லட்சம் அமெரிக்க டொலர் வழங்கல், இலங்கையின் நிலையான பொருளாதார அபிவிருத்தியை உறுதிசெய்வதில் அமெரிக்கா கொண்டிருக்கும் அர்ப்பணிப்பான கடப்பாட்டிற்கு ஓர் உதாரண மேயாகும்.

இந்தச்செயற்திட்டம் பால் உற்பத்தித்துறையை மேம்படுத்துவதுடன் மாத்திரமன்றி, இந்தத் துறையில் வளர்ச்சியடைவதற்கு அவசியமான வளங்கள் பால்பண்ணையாளர்களுக்கு வழங்கப்படும் என்று இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தக் கைச்சாத்திடல் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது.

## தமிழருவி சிவகுமாரனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

### யாழ். இந்துக் கல்லூரி வழங்கிக் கௌரவித்தது







யாழ் இந்துக்கல்லூரியின் புகழ் பூத்த பழையமாணவனும் முன்னாள் ஆசிரியருமான தமிழருவி சிவகுமாரன் அவர்கள், அவரது மேன்மை மிக்க பன்முகப் பணிகளுக்காக 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கி கௌரவிக்கப்பெற்றார்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் கொழும்பு இந்துக்கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சொல்லாடல் நிகழ்ச்சியில் இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டது.

# 63 நாயன்மார்களுக்கும் ஒப்பிணையானவர் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி!

**(நேற்று 15-06-2022) புதன்கிழமை சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மறைந்து 14 வருடங்கள். அதனை முன்னிட்டு அவர் மறைந்தபோது லண்டனிலிருந்து தங்க முகுந்தனால் எழுதப்பட்ட அஞ்சலி ஆக்கம் மீள்பிரசுரம் செய்யப்படுகின்றது.**



**தங்க. முகுந்தன்**

"தன்னைப் போலச் சகலமும் ஓம்புக
விண்ணைப் போல வியாபகமாகுக
கண்ணைப் போலக் காக்க அறத்தை" - யோகர் சுவாமிகள்

துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி, திருவாசகக் கொண்டல், பண்டிதை, செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்கள் அம்பிகையின் பாதாரவிந்தங்களை இறுகப்பற்றிப் பிறவாத பேரின்பமுத்தியடைந்தார் என்ற செய்தியறிந்து தாயினைப் பிரிந்த கன்றினைப்போல சொல்லமுடியாதளவு பிரிவுத்துயர் கொண்டேன்.

நல்லூர் சிவயோக சுவாமிகள் கூறிய
"எப்பவோ முடிந்த காரியம்
ஒரு பொல்லாப்பும் இல்லை
முழுதும் உண்மை
நாமறியோம்"

என்ற நான்கு மகாவாக்கியங்களின் பொருளை உணர்ந்து - நமக்குள் நாமே எம்மைத் தேற்றி அன்னாருடைய பூதவுடலுக்கு அஞ்சலி செய்ய முடியாது கடல் கடந்து சுவிற்ஸர்லாந்து தேசத்தில் வாழும்நிலையில் எம்மனக்கண்முன்னே புன்முறுவல் பூத்த அம்மையாருடைய புகழுடம்புக்கு நான் அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். அடியேன் கடந்த 30 வருடங்களுக்கு மேற்பட்டகாலம் அம்மையாருடன் தொடர்பு கொண்டிருந்ததை இந்தநேரத்தில் மீட்டுப் பார்த்து - அதனை வெளிப்படுத்த வேண்டியவனாக இருக்கின்றேன்.

1977 ஆம் ஆண்டு கடைசிக் காலங்களில் நாம் தெல்லிப்பழை ஸ்ரீ காசிவிநாயகர் ஆலயத்திற்குப் பக்கத்தில் குடிவந்த காலங்களில் காசிப்பிள்ளையாரிடமும் துர்க்கா தேவியம்பாளிடமும் தினமும் சென்று வழிபட்டு வருவதுடன் ஆலயத் தொண்டுகளிலும் ஈடுபட்டுவந்தேன்.



துர்க்கையம்பாள் ஆலயத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமை மாலையிலும் அடுத்தநாள் செவ்வாய்க்கிழமை விசேட பூசைகளுக்காக பல தொண்டுகள் செய்து வந்தோம். அம்மையாரை நாம் எல்லாரும் ரீச்சர் என்றே பாசமாக அன்புபாராட்டி அழைத்து வந்தோம். ஆலயத்தை மிகவும் உன்னத நிலைக்கு இன்று கொண்டுவந்த அவரது அயராத உழைப்பை - அன்னை அம்பிகையிடம் தன்னை அர்ப்பணித்த பாங்கை எடுத்துரைக்கச் சொல்லால் முடியாது. இராச கோபுரம் - சித்திரத்தேர் - தீர்த்தத்தடாகம் அன்னதான மடம் கல்யாண மண்டபம் மட்டுமல்ல அம்பிகையின் அழகிய திருவுருவச் சிலை வார்ப்பு, இன்று கணீரென ஒலித்துக் கொண்டிருக்கும் கண்டாமணி வார்ப்பு - சைவ சித்தாந்த திருமுறை மாநாடு - சண்டி மகா ஹோமம் என்பவற்றைத் திறம்பட நடத்தி முடித்ததும் ஹரிதாஸ்கிரி சுவாமிகள், திருமுருக கிருபானந்த வாரியார் ஆகியோரைத் தரிசிக்கும் பேறு எமக்குக் கிடைத்ததும் அன்னையுடைய அளப்பரிய அடக்கமான சேவையால் என்றால் மிகையாகாது.

மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் வீ. தர்மலிங்கம், தனியாக ஆலயத்துக்கு வருகைதந்துவிட்டு வீடு செல்லும்போது(அவர் நிர்வாக சபையில் இருந்தாரா என்பதை நான் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை. ஆனால் அடிக்கடி அவர் அங்கு வருவதைக் கண்டிருக்கின்றேன்) அவரது வாகனத்தில் கோவிலிலிருந்து மில்க்வைற் அதிபர் சிவதர்மவள்ளல் மறைந்த க. கனகராசாவுடன் போவது வழக்கம். அவரும் அவரது துணைவியாரும் அடிக்கடி ஆலயத்துக்கு வந்துபோவதுண்டு.

எனது பெரிய தந்தையார் மறைந்த அ.அமிர்தலிங்கமும் குடும்பத்துடன் ஆலய வழிபாடு செய்யப் போகும்போது நானும் போவதுண்டு. ஆலயத்தில் வசந்தமண்டபத்திலும் தெற்குவாசலிலும் அடிக்கடி தேவாரம் பாடும்பணி எனக்குக் கிடைப்பதுண்டு. செவ்வாய்க்கிழமை மாலையில் வசந்த மண்டப பூசைகளின் பின்னர் தினமும் ரீச்சருடைய அருளுரை இடம்பெறும். அரனையும் அறத்தையும் வலியுறுத்தும் அப்பேச்சுக்கள் மன அழுக்குகளை நீக்கப் பெரிதும் உதவின. அதன்பின் சிலவேளைகளில் ரீச்சர் என்னைத் தேவாரம் பாடும்படி சொல்லிவிட்டு வேறு அவசிய தேவைகளுக்காக அலுவலகத்துக்குச் சென்றுவிடுவதுண்டு.

ஆலயத்தின் தேவைகளுக்காக கொழும்பிலிருக்கும் அடியார்களுடன் தொலைபேசியில் தொடர்புகொள்ள நாமிருந்த அலுவலகத்துக்கு வருகைதந்து நீண்ட நேரம் காத்திருந்து அனைவருடனும் தொலைபேசியில் பேசி தனது பணிகளைச் செம்மையாகச் செய்த பெருந்தகை அவர். ஏனெனில் அன்றைய நிலையில் தொலைபேசி ஆலயத்துக்கு அண்மையில் எமது காரியாலயத்தில் மாத்திரம் இருந்தது.

மகாஜனாவின் 'உனை நீ அறி' என்ற கல்லூரி வாசகமும், காசிப்பிள்ளையார் கோவில் பிரதம குருக்கள் மறைந்த கணேசலிங்கக்குருக்கள் ஐயா, ம.சி. சிதம்பரப்பிள்ளை, ஆசிரியர் விநாயகரத்தினம், ஆசிரியை கலாதேவி போன்றோரது தொடர்பும் நான் சமயப் பணியில் ஈடுபட பெரிதும் உதவின. குறிப்பாக கீரிமலைச் சிவநெறிக் கழகம் நடத்திய கதாப்பிரசங்கப் போட்டிகளுக்காக என்னைத் தயார்படுத்திய பெருமை இப் பெரியார்களுக்கே உண்டு. ரீச்சர் காசிப் பிள்ளையார் கோவிற் பணிகளிலும் பாலர் ஞானோதய சபையுடனும் பெரிதும் தொடர்புபட்டிருந்தார்.

1985 இல் எமது மூளாய் இந்து இளைஞர் மன்றத் திறப்புவிழாவுக்கு ரீச்சர் வருகைதந்தமை மட்டுமல்ல பலதடவைகள் எமது பிள்ளையார் கோவிலுக்கும் வந்து சொற்பொழிவாற்றி எமக்கு நல்லறிவும் தெளிவும் தந்தார்.

சுன்னாகம் திருமகள் அச்சகத்தைப் பொறுப்பெடுத்து பெரிய புராண வசனச் சுருக்கத்தை மறுபிரசுரம் செய்த பெருமை ரீச்சருக்குண்டு.

ஆலயத்தின் நகைகளும் பெறுமதிமிக்க பொருள்களும் கொள்ளையிடப்பட்டபோதும், வசந்த மண்டபத்துக்கு அருகிலுள்ள களஞ்சிய அறை படையினரின் எறிகணைத் தாக்குதலுக்குள்ளாகி சேதமடைந்த பொழுதும், மனவுறுதியுடன் எல்லாம் அவளே பார்த்துக் கொள்வாள் என்று எமக்கு ஆறுதல் சொல்லித் தேற்றிய மனதிடத்தை நினைவிற்கொள்ளவேண்டும். களவு போன நகைகள் மீள வந்ததே அம்பாளின் அனுக்கிரகம் என்பதை விட ரீச்சரின் அருள்வாக்கு என்றால் மிகையாகாது. ஏனெனில் அம்பாள் வேறு ரீச்சர் வேறாக என்னால் கருத முடியவில்லை. காரணம் ஏற்கனவே சொன்னதுபோல தன்னை அறிந்தால் அது நீயாகிறாய் என்னும் 'தத்வமஸி' என்ற உண்மை புலப்படும்.

நாட்டின் அனர்த்தங்களால் நாம் இடம்பெயர்ந்து கொழும்பிலிருந்தபோது அங்கு வருகைதரும்போதும் நாம் அம்மையாரைச் சந்தித்து வந்ததுண்டு (எஸ். கே. பொன்னம்பலம் அவர்கள் வீட்டில்). ரீச்சருடைய பிறந்த நாள் ஒன்றுக்கு கொழும்பிலிருந்து கூட்டணித்தலைவர் மு. சிவசிதம்பரம், அ. தங்கத்துரை, வீ. ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா ஆகியோருடன் நானும் ஒரு வாழ்த்துக் கடிதம் கையொப்பமிட்டு அனுப்பியிருந்தோம். அதற்கு நன்றி தெரிவித்து ரீச்சர் பதிற் கடிதம் எழுதியிருந்தார். கடிதமோ, பணமோ எது வரினும் அவர்களுக்கு உடனுக்குடன் பதில் எழுதும் வழக்கம் கொண்டிருந்தார். (இதனை மிகவும் அழகாக ரீச்சருடைய இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட நீதிபதி ஆர் ரி. விக்னராஜா அவர்கள் குறிப்பிட்டிருந்தார்)

1997 இல் யாழ் மாநகர சபைத் தேர்தல் பணிகளுக்காக யாழ் வந்த சமயம் அம்மையாரைத் தரிசிக்க ஆலயத்துக்கு வந்தவேளையில் என்னை அந்தத் தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று கூறியதற்கு அமைய நான் தேர்தலில் போட்டியிடாது அவரது கட்டளைக்கு அடிபணிந்து நடந்துகொண்டேன். அதன்பின் முதல்வர் சரோஜினி யோகேஸ்வரனின் அகாலமரணத்தின் பின்னர் மாநகர சபையை நடத்த எவருமில்லாதபோது நாம் மறைந்த முதல்வர் சிவபாலன் மற்றும் இரவிராஜ் ஆகியோருடன் சேர்ந்து போய் சந்தித்தபோது நான் உறுப்பினராக வரவிருப்பதை அவருக்கும் தெரிவித்து அவரது ஒப்புதலுடன் மாநகர சபை உறுப்பினரானேன். எனது திருமணத்தை தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் நடத்த தீர்மானித்தபோது அன்றைய நாளில் வேறோரு திருமணம் நடக்க இருந்தபடியால் நல்லூர் துர்க்காமணிமண்டபத்தில் நடத்த ஒழுங்குசெய்து தந்ததுடன் எனது திருமணநாளன்று முழுநேரமும் நல்லூரில் வந்து நின்று எம்மை ஆசீர்வாதம் செய்து வாழ்த்தியதை எப்படி என் வாழ்நாளில் மறக்கமுடியும்.

எமது கட்சித் தலைவர்கள் வீ. ஆனந்தசங்கரி, இரா. சம்பந்தன், ந. இரவிராஜ் ஆகியோருடனும் துர்க்காபுரம்போய் அம்மையாரைச் சந்தித்ததையும் இவ்விடத்தில் நினைவுபடுத்துவது நல்லது. மறைந்த நாடாளுமன்ற உறுப்பினரும் தெல்லிப்பழை ப.நோ. கூ. சுங்கத் தலைவருமான சிவமகாராசா அவர்களும் ஆலயத்துடனும் ரீச்சருடனும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தமை யாவரும் அறிந்ததே.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் மறைந்த தந்தை செல்வா, ஜீ. ஜீ பொன்னம்பலம் ஆகியோர் மீதும் பெரும்மதிப்பு வைத்திருந்த ரீச்சர், மறைந்த குமார் பொன்னம்பலம் அவர்களது நினைவாக வெளியிடப்பட்ட நினைவு நூலிலும், எனது பெரிய தந்தையார் மறைந்த அ. அமிர்தலிங்கம் அவர்களுடைய நினைவு மலரிலும் தனது செய்தியை தெரிவித்திருப்பதையும் நான் குறிப்பிடவேண்டும்.

கடந்த ஞாயிறு 15.06.2008 காலையில் அதாவது அவர் உயிர்பிரிந்த நாளில் நானும் லண்டனில் வசிக்கும் எனது பெரிய தாயாரும் (திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்) ரீச்சரைப்பற்றிப் பேசியிருந்தோம். தனக்கு சிவத்திரு. சிவபாலன் அவர்கள் கோவில் பிரசாதம் அனுப்பியிருந்தார் எனவும் அதில் ரீச்சருடைய உடல்நிலை பற்றி எழுதப்பட்ட கடிதத்தில் தம்பி முகுந்தனுக்கும் அறிவிக்கவும் அவர்தான் எம்மை உங்களுக்கு அறிமுகம் செய்தார் என்றும் குறிப்பிட்டதாகத் தெரிவித்திருந்தார். நான் ஏற்கனவே குறிப்பிட்டமை போல 30 வருடங்களாக சிவத்திரு. சிவபாலன் அவர்களையும் ரீச்சரைச்சந்தித்த காலத்திலிருந்தே தெரியும். நாமனைவரும் ஒரு குடும்பமாக - ஆத்மீகத்தில் - அன்பில் - தொண்டில் மானசீகமான பக்தித் தொடர்பில் பிணைக்கப்பட்டிருந்தோம்.

அம்மையார் ஈழநாட்டின் நாவலருக்கு அடுத்த ஆறாம் சமயகுரவராகப் போற்றப்பட வேண்டிய பெருமைக்குரியவர். அறுபத்து மூன்று நாயன்மார் வரிசையில் வரும் பெண்ணடியார்கள் மூவரையொத்த பெரும் பணியாற்றியவர். நமது நாட்டில் மாத்திரமல்ல பல வெளிநாடுகளுக்கும் சென்று தமிழ்ப்பணியும் சமயப் பணியும் புரிந்த பெருமைக்குரியவர். அனைவருடனும் எளிமையாகவும், புன்முறுவல் பூத்தமுகமுடையவராய் அன்பொழுகப் பேசி அனைவரது நெஞ்சங்களிலும் என்றும் நீங்காமல் உறைகின்ற பெருமையுடையவர். செல்லும் அனைவருக்கும் போதும் போதும் என வயிறாரச் சோறு போட்ட பெருமையுமுடையவர்.

அன்னாரைப் பற்றிச் சொல்லிக்கொண்டே போகலாம். அவ்வளவுக்கு எம்முடன் பாசத்தில் பிணைந்திருந்தார். அவரது பணிகளைப்பற்றி பலரும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# தமிழ் மக்கள் எங்கு நிற்கிறார்கள்?



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் -35**

சுதந்திரம் கிடைத்த நாள்களிலிருந்தே எகிறி குதித்து, இந்தியாவை விலக்கி, அதன் ஆளுமைக்கு இடம் கொடாமல், பின்னைய நாள்களில் இந்திய – இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னரும் விரோதப் போக்கில் இருந்த சிங்களப் பேரினவாத அரசுகள், இன்றைய பொருளாதார சிக்கல் நிலையில் வளைந்து கொடுத்து, இந்தியாவின் ஆளுமைக்கு இடமளித்து செயற்படுகின்றன.



இந்த அனுபவங்களையும் படிப்பினைகளையும் பிராந்திய புவியியல் சார்ந்த அணுகுமுறைகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்து, தொடர்ந்து பயணிக்கத் தமிழ் மக்களும் இணக்கம் கொண்டு தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்தியா, இந்திராகாந்தி அம்மையார் சிந்தித்த நோக்கில் இலங்கைத் தமிழ் மக்களுக்கு தனிநாடு ஒன்றை பெற்றுத் தர வேண்டும் என்று திம்பு மாநாடு காலங்களிலிருந்தே தமிழ் மக்கள் எதிர்பார்த்தார்கள். விரும்பினார்கள்.


ஆனால் ராஜீவ் காந்தியின் ஆட்சியில் பிராந்திய சூழ்நிலைகளால் இந்திய வெளியுறவுக் கொள்கைகள் அப்படி அமையவில்லை.

தமிழ் மக்களுக்காக சிறிலங்காவுடன் பல பேச்சுவார்த்தைகளுக்குப் பின் ஜே.ஆரைப் பணியவைத்து, அவரது ஜனாதிபதி அதிகாரங்களைப் பாவித்து இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை பாரதம் ஏற்படுத்தியது.

இரு நாடுகளுக்கு இடையே ஏற்றுக் கொள்ளப்பட்ட அந்த ஒப்பந்தத்தை தமிழ் மக்களின் சார்பாக நடைமுறைப்படுத்தச் செய்வோம் என காங்கிரஸுக்குப் பின்னர் பதவிக்கு வந்த மோடி அரசும் கூட சொல்லி வருகிறது.

1987 இலிருந்து இந்த ஒப்பந்தத்தை இரு பகுதியினராலும் முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாமல் பல காரணங்கள் இருந்தன.

அதில் முக்கியமானவை:– எந்த அதிகாரங்களையும் மாகாணங்களுக்குத் தர விரும்பாத சிங்களப் பேரினவாதப் போக்கு, விடுதலைப் புலிகள் இந்தியாவுடன் யுத்தம் புரிந்தமை, பின்னர் பிரேமதாஸாவுடன் ஏற்பட்ட இணக்கங்களில் இந்தியப் படைகள் வெளியேற்றப்பட்டமை, மாகாண சபைகளை ஓர் இடைக்காலத் தீர்வாக பரிசீலிக்க புலிகள் விரும்



பாமை, காணி – பொலிஸ் அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்க மறுத்துக் காலை வாரிய பிரேமதாஸாவின் போக்கு, 2009 வரை நீடித்த ஸ்ரீலங்கா அரசுடனான போராட்டம், மஹிந்த ராஜபக்ஷவின் நேர்மையின்மை எனப் பலவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஜே.ஆர் மாகாண சபைகள் ஸ்தாபிக்கும் சட்ட மூலங்களை அமைத்தபோது தனது நடைமுறை அதிகாரங்களின் கீழ் ஜனாதிபதியான தானே மாகாணங்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்த்து அவற்றைச் சட்டமாக எழுதியமைதான் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

நல்லெண்ணம் கொண்ட ஜனாதிபதி ஒருவர் பதவியில் அமர்ந்திருந்தால் உறவுகளின் அடிப்படையில் இவை மேலோட்டமாகப் பார்க்கப்பட்டு, நட்புறவில் முன்னேறி இருக்கலாம்.

ஆனால் அப்படியான ஒரு ஜனாதிபதி பதவிக்கு வரவில்லை. ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் இயலாமல் போயின.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாகாண அரசுகள் அதிகார அடிப்படையில் இந்திய மாநிலங்களுக்கு ஈடானவையாக ஆக்கப்பட்டுள்ளன. ஆனால் ஜே.ஆரினால் ஆக்கப்பட்டு இன்றும் தொடரும் நயவஞ்சகம் அது தொடர்பான சட்டவாக்கத்தில் இன்றும் விசமாகத் தொடர்கின்றது.

உலகத்திலேயே அதிகாரப் பரவல் அரசமைப்பு சட்டத்தினால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்கும் நாடு இலங்கை ஒன்றுதான். எனினும் மாகாண மட்ட நடைமுறை அதிகாரங்கள் தொடர்ந்தும் மத்திய அரசின் கைகளில் – ஜனாதிபதியின் கீழ்தான் – இருக்கின்றன.

ஒற்றையாட்சி அமைப்புக்கள் உள்ள ஸ்கொட்லாண்ட், அயர்லாந்து, இந்தோனேசியாவின் ஆச்சே பிரதேசம் போன்றவற்றிற்கு அதிகாரப் பரவல் தரப்பட்டாலும், அவை நாடாளுமன்றச் சட்டங்களால் மாவட்ட நடைமுறை அதிகாரங்கள் நேரடியாக மாகாண அரசுகள் கீழ் வந்தன. ஆனால் ஸ்ரீலங்காவில் அப்படியாக இல்லாமல் அவைதும் மால் நியமிக்கப்பட்ட கவர்னர் மூலம் ஜனாதிபதியின் கைகளினால் முழுமையாகக் கையாளப்படுவனவாக இருக்கின்றன. மாகாணசபைகள் முன்னெடுக்க விரும்பிய எவற்றையும் ஜனாதிபதியின் பிரதிநிதியான கவர்னரின் அங்கீகாரம் இல்லாமல் செய்ய முடியாத நிலை இருக்கிறது.

அதை மாற்ற, மந்திரிசபை அந்த அதிகாரங்களை மாகாண சபைக்குத் தருவதற்குத் தீர்மானம் ஒன்றை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்தி இருக்கலாம். அந்த தீர்மானம் ஒரு குறிப்பிட்ட திகதியில் இருந்து மாவட்ட அரசாங்க அதிபர்கள், மாவட்டக் காரியாலயங்கள், பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர்கள் யாவரும் மாகாணசபையின் அதிகாரத்திற்கு கீழ் வருவார்கள் எனவும், மேலும் இனி செய்யப்படும் நியமனங்கள் மாகாண சபையினால் மேற்கொள்ளப்படும் எனவும் தெளிவாகத் தெரிய படுத்தி இருக்க வேண்டும். ஸ்ரீலங்காவின் அரசியலில் அப்படியான ஒரு திகதியும் அல்லது தீர்மானமும் மந்திரிசபை ஆட்சி காலத்தில் கூட எடுக்கப்படவில்லை. அதற்கு எதிர்ப்புகள், முக்கியமாக பேரினவாதத்தை அமல்படுத்திய வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு அனுப்பப்பட்ட 60 முதல் 70 வீதமான மத்திய அரசின் அதிகாரிகளிடம் இருந்தே வந்தன. அவர்கள் தங்களது அதிகாரங்களை மாகாண சபைகளுக்குத் தரத் தயாராகவில்லை.

இந்த நிலையை மாற்றி, அதிகாரங்



களை மாகாணங்களுக்குப் பெற்று நடைமுறைப்படுத்த தமிழ் மக்களது அரசியல் தலைவர்களாலும் முடியவில்லை. அவர்கள் அந்த வழிகளில் முயற்சி எடுக்கவில்லை. தேர்தலுக்குத் தேர்தல் சமரஷ்டி தேடிக்கொண்டு இருந்தார்கள்.

அரசுக்கு சலாம் போட்டு பதவியில் இருந்தவர்கள் அதில் ஆதாயம் பெற்றமையால் அதனையே தொடர்ந்து கொண்டு செல்ல உதவிகள் தந்தனர்.

அரசமைப்பில் இணைக்கப்பட்ட அதிகாரப் பரவலை நீக்கி, ஒப்பந்தத்தை பலமற்றதாக்குவது சிங்களப் பேரினவாதிகளின் குறியாக இருந்தது. இதற்காக அவர்களுக்குப் புதிய அரசமைப்பு வேண்டியிருந்தது. அதில் அதிகாரப் பரவலை நீக்கி, ஒற்றையாட்சியைப் பலப்படுத்த திட்டம். நயவஞ்சகத்தில் ஜே.ஆரை மிஞ்சிய மஹிந்த, விடுதலைப் புலிகள் அழித்துப் பயங்கரவாதிகளை நசுக்கி விட்டால், அதன் பின்னர் அதிகாரப் பரவலாக்கலைத் தானே மேலும் விஸ்தரிப்பார் என்று சர்வதேசத்திற்கு வாக்களித்து, பத்து வருடங்களுக்கு மேல் பாம்பு போல் நெளிந்து கடைசியில் கோட்டாபய மூலம் நஞ்சைக் கக்கினார்.

அதன் பின்னர் இப்போது புதிய அரசமைப்பை 'ஒரு நாடு, ஒரு சட்டம்' என்ற பௌத்த முன்னுரிமையோடு கொண்டு வருவோம் என்பது ராஜபக்ஷக்களின் உறுதிமொழி.

அந்த வாக்குறுதியின் பேரில் தேவைக்கு மேலான பலத்தோடு சிங்கள மக்கள் அவரைத் தேர்ந்தெடுத்தார்கள்.

அதன் பலனை முழுநாடுமே இன்று அனுபவிக்கின்றது.

(வளரும்)



# மக்கள் பிரச்சினைகளை தீர்க்க அவசரக் கூட்டத்தைக் கூட்டுக!

## ஜனா எம்.பி. அரச அதிபரிடம் கோரிக்கை




மட்டக்களப்பு மாவட்டத்தில் அவசரமாக தீர்க்கப்படவேண்டிய மக்களது பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கான அவசரக் கூட்டத்தினை ஏற்பாடு செய்யுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாவட்ட அரசாங்க அதிபரிடம் கடிதம் மூலமாக விடுக்கப்பட்டுள்ள இந்த கோரிக்கையில், நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

உணவு, அன்றாடத் தேவைகள், எரிபொருள், எரிவாயு என அனைத்துக்கும் பெரும் இறுக்கமான பிரச்சினைகளுக்கு உள்ளாகியிருக்கும் மக்களுக்கு நிம்மதியைக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

முக்கியமாக விவசாயிகளைப் பொறுத்தவரையில் இரசாயன உரப் பிரச்சினை அவர்களது வாழ்வாதாரமான வேளாண்மை மற்றும் பயிர்ச் செய்கையின் விளைச்சலை வீழ்ச்சியடைய செய்திருக்கிறது. ஆரம்பித்திருக்கும் இந்தப் போகத்திலும் உரம் சரியான முறையில் விநியோகிக்கப்படுமா என்பது புரியாமலிருக்கிறது. இதற்கு நம்முடைய மட்டக்களப்பு மாவட்டம் மாத்திரம் விதிவிலக்கானதல்ல.

இந்த நிலையில் மக்களுக்கான நிவாரணங்கள், உதவிகள் சரியான முறையில் அவர்களை சென்றடைவதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மக்களுக்குத் தேவையான பொருள்கள் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

விவசாய உற்பத்திகளை அதிகரிக்கும் வகையில், அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள தரிசு நிலங்களை பயிர்ச் செய்கைக்குட்படுத்தும் வேலைத்திட்டத்தை விரைந்து எமது மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்துவது முக்கியமாகும்.

அதன் மூலம் எதிர்வரும் மாதங்களில் ஏற்படவுள்ள உணவுத் தட்டுப்பாட்டை ஓரளவுக்கேனும் கட்டுப்பாடுக்குள் வைத்திருக்க முடியும் என எண்ணுகிறேன். அதற்கு அனைத்து தரப்பினருடைய ஒத்துழைப்பும் அவசியமாகும்.

எனவே இவ்வாறான செயற்பாடுகளை மாவட்டத்தில் விரைந்து நடைமுறைப்படுத்தும் வகையில், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், அரச திணைக்களங்களின் பிரதிநிதிகள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், மேட்டு நிலப் பயிர்ச் செய்கையாளர்கள், கால்நடை பண்ணையாளர்கள் உள்ளிட்டோரை உள்ளடக்கிய வகையில் விசேட ஆராய்வுக் கூட்டம் ஒன்றை ஏற்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்டத்தின் அரசாங்க அதிபர் என்ற வகையில் இந்த விடயம் குறித்துதொடர்பாகத் தங்களது விரைந்த நடவடிக்கையை எதிர்பார்க்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல்; ஜெனிவா அமர்வில் கவலை தெரிவிப்பு



இலங்கையில் அமைதியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாக ஜெனிவாவில் இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு இணை அனுசரணைன வழங்கிய பிரித்தானியா தலைமையிலான நாடுகள் வேண்டுகோள் கரிசனை வெளியிட்டுள்ளன.

ஜெனிவாவில் இடம்பெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 50 ஆவது அமர்வில் கனடா, பிரிட்டன், அமெரிக்கா, ஜேர்மனி, மலாவி, மொன்டினீக்ரோ, வடமசடோனியா ஆகிய நாடுகள் இணைந்து இந்த கரிசனையை வெளியிட்டுள்ளன.

இலங்கை கடந்த சில மாதங்களாக குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டுள்ளது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம், இதனால் இலங்கை மக்களுக்கு கடும் துன்பம் ஏற்பட்டுள்ளது.

அமைதியான முறையில் ஒன்றுகூடுதல் கருத்து சுதந்திரம் ஆகியவற்றுக்கான தங்களது உரிமையை ஆர்ப்பாட்டக்காரர்கள் சமீபகாலங்களில் பயன்படுத்தியுள்ளனர் என்பதை நாங்கள் கருத்தில் எடுத்துள்ளோம்.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீதான வன்முறை தாக்குதல் தொடர்பில் அரசாங்கத்தின் அரசியல்வாதிகள் ஆதரவாளர்கள் மீதான வன்முறைகள் பற்றியும் நாங்கள் ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம்.

இந்த வன்முறைகளுக்குக் காரணமானவர்கள் பொறுப்புக்கூறச்செய்யப்படவேண்டும்.

ஜனநாயகம்,மனித உரிமைகள் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை உறுதிப்படுத்தவேண்டியதன் சுயாதீன ஸ்தாபனங்களைப் பேணவேண்டியதன் அவசியத்தை நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

நீண்டகாலமாகக் காணப்படும் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதல் ஊழல் ஆகியவற்றுக்குத் தீர்வைக் காணுமாறும், நல்லாட்சி மற்றும் சிறந்த பொருளாதாரக' கொள்கைகளை முன்னிலைப் படுத்துமாறும் நாங்கள் இலங்கையின் ஆட்சியாளர்களை கேட்டுக்கொள்கின்றோம்.

சிவில் சமூகத்தினர் கண்காணிக்கப்படுவது அச்சுறுத்தப்படுவது தொடர்பான எங்கள் கரிசனைகள் தொடர்கின்றன. சிவில் சமூகம் செயற்படுவதற்கான சூழலைப் பாதுகாக்கவேண்டியதன் அவசியத்தை நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

இலங்கை மனித உரிமை ஆணையாளருக்கும் அவரது அலுவலகத்துக்கும் ஆதரவை வழங்கவேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம் என ஜெனிவாவில் இலங்கை தொடர்பான தீர்மானத்திற்கு இணை அனுசரனை வழங்கிய பிரித்தானியா தலைமையிலான நாடுகள் தெரிவித்துள்ளன.

## குறைந்த வருமானத்தைப் பெறும் விவசாயிகளுக்கு இலவச யூரியா

*குறைந்த வருமானம் பெறும் ஒவ்வொரு விவசாயக் குடும்பத்திற்கும் இலவச யூரியா உரப் பொதியை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*இந்த விடயம் தொடர்பாக உணவு மற்றும் விவசாய அமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளன என விவசாய மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.*

*அதன்படி, குறைந்த வருமானம் பெறும் விவசாயக் குடும்பங்களுக்கு 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு மகா பருவத்தில் 3 லட்சத்து 5 ஆயிரம் யூரியா உர மூடைகள் இலவசமாக வழங்கப்படும் என விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார்.*



## வைத்தியர் ஷாபிக்கு சந்திரிகா பாராட்டு!

குருநாகல் வைத்தியசாலையின் மகப்பேறு மற்றும் பெண்நோயியல் பிரிவின் விசேட வைத்தியர் ஷாபி ஷிகாப்தீன் தான் பணி இடை நிறுத்தப்பட்டிருந்த காலத்துக்காக தனக்கு வழங்கப்பட்ட வேதனத்தை அத்தியாவசிய மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கியுள்ளமைக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூக ஊடக பதிவில் கருத்து வெளியிட்டுள்ள அவர், பொறாமை, வெறுப்புணர்வை போர்த்திக்கொண்ட சிங்கள தீவிரவாதத்தின் வெட்கக்கேடான அத்தியாயம் சிறந்த தொழில்சார் நிபுணரின் வாழ்வை சிதைத்துவிட்டதாகத் தெரிவித்துள்ளார்.

வைத்தியர் ஷாபி மீது உமிழப்பட்ட வெறுப்பிற்கு வைத்தியர் ஷாபி வழங்கியுள்ள பதிலிற்காக பாராட்டுக்களை தெரிவிக்கிறேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிந்திக்கும் திறன் உடைய அனைத்து சிங்கள பிரஜைகளும் வைத்தியர் ஷாபினை வணங்குகின்றார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 63 நாயன்மார்களுக்கும் ........



(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

தான் எங்கே வேறு இடங்களுக்குச் சென்றால் தனது பராமரிப்பில் இருக்கும் பிள்ளைகளை தவிக்க விட்டுவிடுவோமோ என்ற ஆதங்கமும் பொறுப்பும் கொண்டிருந்த ரீச்சர் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரம் நல்லூர் மணிமண்டபத்துக்குச் செல்லும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். களியாட்ட நிகழ்ச்சிகளைப் பெரும்பாலும் தவிர்த்துக்கொண்டு தனது கடமையைச் செவ்வனே செய்தார். செஞ்சொற் செல்வர் சிவத்திரு. ஆறுதிருமுருகன் அவர்களைத் தமக்குப்பின் - தனது பொறுப்பை ஒப்படைத்தார் என்று நான் கூறுவதில் பெருமையடைகின்றேன். ஏனெனில் இதுகூட ஒரு குருபரம்பரையையொத்த பணியென நான் கருதுகின்றேன். முற்றிலும் மாறுபட்ட - வாழ்வே கேள்விக்குறியாக இருக்கும் எம் இனத்தின் கண்ணெனத் திகழ்ந்தவர் ரீச்சர் அவர்கள். ஒவ்வோர் செவ்வாய்க்கிழமையும் ஆலய வழிபாட்டில் தமிழ்ப் பண்பாட்டையும், வாழ்வில் எளிமையையும் கடைப்பிடிக்க அவர் கூறும் அறிவுரைகள் - ஏனைய ஆலயங்களுக்கு ஒரு முன்மாதிரி.

எமக்கெல்லாம் உறுதுணையாக வழிகாட்டியாக இருந்த அம்மையாரைப் பிரிந்து இன்று தவிக்கும் துர்க்காபுர மகளிர் இல்லச் சிறுமியருக்கும், (அவர்களது சோகத்தை நாம் ஒருபோதும் தேற்றமுடியாது. தொண்டர் அணியினருக்கும், ஆலய நிர்வாகசபையினருக்கும், தாயாயிருந்து வழிநடத்திய இந்து இளைஞர் சங்கத்தினருக்கும் மற்றும் அம்பிகை அடியார்களுக்கும் எல்லாம்வல்ல ஸ்ரீதுர்க்காதேவியம்பிகை மனதைரியத்தையும், சாந்தியையும் வழங்க மனதாரப் பிரார்த்தித்து ரீச்சரின் ஜீவாத்மா அன்னை துர்க்காதேவியின் பாதாரவிந்தங்களில் நித்தியப் பேரின்பத்தில் ஐக்கியப்பட்டுச் சரணடையப் பிரார்த்தித்து எனது இக்கண்ணீர்க் காணிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.06.2022இல் வெளியிடப்பெற்றது